மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19–ம் நாள் வியாழக்கிழமை
அ.வ.எண். 224/2022
வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: அருணாச்சலம் தேதி : 19.02.26
வயது : த/பெ : ஆறுமுகம்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>19.02.26 குறுக்கு விசாரணை</u>

1.என் அம்மா பெயர் வேலம்மாள். வாதியின் தந்தை ஆறுமுகமும், என் தந்தை ஆறுமுகமும் வேறு வேறு நபர்கள் என்றால் சரிதான். என் பெற்றோர் மூணாரில் லெட்சுமி எஸ்டேட்டில் வேலை பார்த்து வந்தனர் என்றால் மூணாறில் குண்டுமலை எஸ்டேட்–ல் வேலை பார்த்து வந்தனர். நான் அங்கு வைத்து தான் பிறந்து வளர்ந்தேன் என்றால் சரிதான். வாதி முருகையா மூணாறில் உள்ள எஸ்டேட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் வால்பாறை எஸ்டேட்டில் வேலை பார்த்து வந்தார்.

எனக்கும் வாதிக்கும் ஒரே வயது தான். என் வயது 69 வயது ஆகும். என் அம்மாவின் தாயார் பெயர் தெரியாது. என் தந்தையின் தந்தை பெயர் பலவேசம். என் தந்தையின் அம்மா பெயர் மாடத்தி. என் தாத்தா பாட்டியின் பெற்றோர் பெயர் தெரியாது என்றால் சரிதான். நான் எஸ்டேட்டில் எனக்கு 35 வயதாகும் வரை இருந்தேன். அதன்பிறகு என் பெற்றோருடன் ஊருக்கு திரும்ப வந்து விட்டேன்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.23 17:31:29 +0530

என்றால் என் தாயார் என் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். தந்தையும் இறந்து விட்டார். என்னுடைய எத்தனையாவது வயதில் என் தந்தை இறந்தார் என்றால் தெரியவில்லை.

நான் வழக்கு சொத்து உள்ள ஊருக்கு 2000 ஆண்டில் வந்தேன். வாதி சொல்லி தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். நான் அவரது பக்கத்து வீட்டுக்காரர். வாதியின் தாயார் பெயர் வள்ளியம்மாள் என்றால் சரிதான். வள்ளியம்மாளுக்கு முருகையா, பழனி, தங்கப்பழம் ஆகிய 3 ஆண் மக்களும், சீதா என்ற பெண் மகளும் உண்டு என்றால் சரிதான். வள்ளியம்மாளின் முதல் கணவர் ஏமன் என்றால் சரிதான். ஏமனுக்கும் வள்ளியம்மாளுக்கும் பிறந்தவர் தான் சுடலைமணி என்றால் அது தவறு.

ஏமனும், ஆறுமுகமும் ஒரே நபர் என்பதற்கான ஆவணம் உள்ளதா? என்றால் இல்லை. ஏமனுக்கும், வள்ளியம்மாளுக்கும் பிறந்த மகன் சுடலை மணி என்பதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சின்னக்கனியின் பெற்றோர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சின்னக்கனியின் மனைவிதான் வள்ளியம்மாள் என்று பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சின்னக்கனிக்கும், வள்ளியம்மாளுக்கும் பிறந்தவர் சுடலைமணி என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. சின்னக்கனியும், வள்ளியம்மாளும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்துவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.23 17:31:34 +0530

சின்னக்கனிக்கும் வள்ளியம்மாளுக்கும் நடந்ததாக கூறும் திருமணம் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. இருவருக்கும் எந்த தேதியில் எங்கு வைத்து திருமணம் நடந்தது என்றும் இருவரும் எங்கு வசித்தனர் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுடலைமணி மனைவி தான் 1ம் பிரதிவாதி பகவதி அம்மாள் என்றால் சரிதான். சுடலைமணி, பகவதிக்கு பிறந்தவர்கள் தான் ஜெகனும், ஜெயந்தியும் என்றால் சரிதான். என் ஊரில் தங்கவேல், சுப்பையா இருந்த விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

தங்கவேல், சுப்பையாவிற்கு பாத்தியப்பட்ட இடம் எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் தாவா இடப்பிரச்சனை சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுடலைமணி என்பவரும், மணி என்பவரும் ஒரே நபர் தான் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதன் விஸ்தீரணம் ஞாபகம் இல்லை என்றால் 48.5 செண்ட் ஆகும்.

48.5 செண்டில் வழக்கு சொத்து எந்த பக்கம் உள்ளது என்றால் வடக்கு பக்கம் உள்ளது. உட்பிரிவு பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் வடக்கு பக்க எல்லையில் யார் இடம் உள்ளது என்றால் சுப்பிரமணியின் இடம் உள்ளது. சுப்பிரமணியின் இடத்திற்கு வடக்கில் யார் இடம் உள்ளது என்றால் மக்காளி இடம் உள்ளது. வழக்கு சொத்தின் மேற்கில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.23 17:31:38 +0530

சுடலைமணி இடமும், தெற்கில் ஆறுமுகம் இடமும், கிழக்கு பக்கம் மணி என்ற முருகையாவின் இடமும் உள்ளன.

மணி என்ற முருகையா என்ற நபர் இருப்பதற்கான ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மணி என்ற முருகையா என்பதற்கான எந்த ஆவணத்தை பார்த்துள்ளேன் என்றால் எந்த ஆவணமும் பார்க்கவில்லை. வா.சா.ஆ.1ல் மணி என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆம். வாதிக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் 1981ல் கிரையம் வாங்கி இருந்தார். அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

வாதி வழக்கு சொத்தினை கிரையம் வாங்கும் காலத்தில் எங்கு இருந்தார் என்றால் தாவா சொத்து உள்ள ஊருக்கு வந்துவிட்டார். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்திற்கு எந்த தேதியில் வேலி போட்டதாக சொல்கிறேன் என்றால் 1983, 1984ம் வருடங்களில் போட்டதாக ஞாபகம். யாரெல்லாம் சேர்ந்து வேலி அமைத்தோம் என்றால் நானும், வாதியும் சேர்ந்து வேலி அமைத்தோம்.

நானும், வாதியும் சேர்ந்து வழக்கு சொத்தில் வேலி அமைத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறோம் என்றால் சரியல்ல. பகவதியும், ஜெகனும் வழக்கு சொத்தினை 3ம் பிரதிவாதி பேச்சியம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் ஆம். மேற்படி கிரையத்தின்படி 3ம் பிரதிவாதி

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.23 17:31:42 +0530

பேச்சியம்மாள் தான் கிரைய சொத்தினை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் என்ன தாவா என்றால் இடம் சம்பந்தமான தாவா ஆகும்.

3ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் உரிமையாளரிடம் நல்லெண்ண கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் வாதி பெயர் மோசடி செய்து வழக்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளதாக கட்சி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பட்டா மாற்றம் சம்பந்தமாக வாதி நடவடிக்கை எடுத்துள்ளாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி வழக்கு சொத்தை ஒரு காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதியை 3ம் பிரதிவாதி இடையூறு செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.23 17:31:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.